LIBRARY
21

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2014/2015
(ஜூன் 2017)

## TLS 2233 இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல்
## Sri Lankan Tamil Folklore

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து எவையேனும் இரு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி – I

01. அ) தாலாட்டுப் பாடல்களின் வடிவ அமைப்புப் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)
ஆ) தாலாட்டுப்பாடல்களில் இடம்பெறுகின்ற தலைமைக் கருத்துக்களை பாடல்களின் துணை கொண்டு எடுத்துக் காட்டுக. (12 புள்ளிகள்)

02. அ) புராணக்கதை (Myth), பழமரபுக்கதை (Legend), நாட்டார் கதை (Folktale) என்பவற்றை அவ்வவற்றின் பண்பு, பயில்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுத்துக. (08 புள்ளிகள்)
ஆ) ஈழத்துத் தமிழ் நாட்டார் கதைகளை உள்ளடக்க அடிப்படையில் வகைப்படுத்திச் சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

03. அ) பழமொழிகளின் பண்புகள் யாவை? (05 புள்ளிகள்)
ஆ) பெண்கள் குறித்து சமூகத்தில் நிலவும் கருத்துக்களை பழமொழிகளின் துணையுடன் விளக்குக. (15 புள்ளிகள்)

### பகுதி – II

04. 1980கள் வரையான காலப்பகுதியில் ஈழத்து நாட்டார் வழக்கியல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவந்த ஆய்வுகளை எடுத்துக்காட்டி, அவற்றின் போக்குகளை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

05. 'கவி'களின் வடிவ அமைப்புப் பற்றிச் சுருக்கமாக விளக்கி, அக்கவிகள் பாடப்பட்டுவந்த சமூக சந்தர்ப்பங்களை விளக்குக. (20 புள்ளிகள்)

06. "நாட்டார் சடங்குகள் ஒரு சமூகத்தினுடைய இயக்கத்தில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன" ஆராய்க. (20 புள்ளிகள்)

07. ஈழத்துத் தமிழ் நாட்டார் கலை வடிவங்களைக் குறிப்பிட்டு, காமன் கூத்து அளிக்கை செய்யப்படுகின்ற முறை பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

*****************************************************************